முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் அத்திரிமகரிஷி அருளிய அருள் பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

16.09.2019, திங்கட்கிழமை

1. **பாரப்பா அரங்கனே சிறந்த ஞானி**
**பசிபிணி விரட்டும் பரோபகாரம்**
**வரமாக மக்களிடை விதைத்துமே**
**வாழ்வளிக்கும் தவசியே உன் பெருமை கூறி**
2. கூறியே அருள் பிரசன்ன ஆசி
குறையிலா **விகாரி யாளி திங்கள்**
**தெரியவே முப்பான்திகதி சோமவாரம்**
**(விகாரி வருடம் ஆவணி மாதம் 30ம் தேதி, 16.09.2019, திங்கட்கிழமை)**
**தேசிகனுக்கு அத்திரிமகரிஷி யானும்**
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உண்மை ஞான வழிகாட்டிடும்
ஞானதேசிகன் சன்மார்க்க நெறி
நம்பிக்கையூட்டி மக்களை காத்திட
4. காத்திட ஞானசக்தியாக பரவி வர
கலியுகம் மாற்றம் பெறுவது உறுதி
உத்தமமாக கலியுக மக்களும்
ஒன்றிணைந்து அரங்கனை நோக்கி
5. நோக்கி அணுகி உயர் தீட்சை
ஞானம்தரும் சடாட்சர தீட்சை பெற
ஊக்கமுடன் தருமத்தில் உதவி
உலகோர் தொடர்ந்து வருதல் காண
6. காணவே கலியுகம் தன்னில்
கந்தவேலன் அருள் பிரசன்னமாகி
ஞானம் தருவதுடன் மக்களுக்கு
நல்ல வாழ்வும் வளமும் தந்தருளும்
7. அருளும் பொருளும் அளவிலா
ஆசியும் தயவும் கிட்டியே
அருள்மிக்க ஞானயுகமாக
அரங்கன் தருமத்தால் மாறுதல் காணும்
8. காணவே அரங்கமகான் எனும்
கருணாமூர்த்தி உண்மை சேவை
தானதருமமாக பெருகி வர
தருமவழி ஏற்று உலகெங்கும்
9. எங்கும் அன்னதான கிளை
இனிதே அமைத்து தருமம்
தேங்கா வளர்ந்து வருக
தேசமெங்கும் தருமசக்தி பரவி

10. பரவியே அரங்கன் விரும்புகின்ற
பக்குவம் பரோபகார நிலையை
தரணியில் மக்களெல்லாம் அடைந்து
தவசிபோல் நிலைகள் உயர்ந்து

11. உயர்ந்து உலகமாற்றம் கணக்கு
உயர் ஞானிகள் எனும் நிலை
தயவால் எல்லோரும் அடைவர்
தாமுரைத்த அருள் பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் அத்திரிமகரிஷி அருளிய அருள் பிரசன்ன ஆசி நூலின் சாரம்**

உலகமக்களே இவ்வுலகினில் மிகச்சிறந்த ஞானி யாரெனில் அது ஆறுமுக அரங்கமகா தேசிகனார் தான் உலக மக்களின் பசிப்பிணியை விரட்டி பரோபகாரமாகிய ஜீவதயவினை மக்கள் மனதினுள் விதைத்து மக்களை வாழ வைக்கின்ற மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகராவார் அற்புத மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனே உமது பெருமையினை உலகமெலாம் கூறியே உலக நலன் கருதி விகாரி வருடம் ஆவணி மாதம் 30ம் நாள் 16.09.2019, திங்கட்கிழமையான இன்றைய தினமதனிலே அருள் பிரசன்ன ஆசி நூல் தனையே அத்திரிமகரிஷி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் அத்திரிமகரிஷி.

அருள் ஞானதேசிகனார் அரங்கரின் தூய சன்மார்க்க நெறி மக்களுக்கு நம்பிக்கையூட்டி காத்து வருகின்றதப்பா. அரங்கரின் தூயநெறி மக்களை காப்பதுடன் ஞானசக்தியாக உலகமெங்கும் பரவி வருகுதப்பா. உலகமெங்கும் அரங்கரின் தூயநெறி உலகமெங்கும் பரவபரவ உலகம் கலியுகத்தினின்று விடுபட்டு ஞானயுகமாக உறுதியாக மாறுமப்பா.

கலியுக மக்களெல்லாம் ஒன்றிணைந்து ஆறுமுக அரங்கமகா தேசிகனார் திருவடி பணிந்து உயர்ஞான தீட்சை உபதேசம் அடைந்து ஞானம் தரும் சடாட்சர தீட்சை பெற்று வருவதுடன் ஆறுமுக அரங்கமகான் ஆற்றும் தானதருமப் பணிகளில் தாராளமாய் பொருளுதவிகளைச் செய்து வருவதுடன் ஞானிகளை தினம்தினம் தவறாமல் பூஜைகள் செய்து வர, கலியுகத்தினில் முருகப்பெருமானின் அருள் பிரசன்னமாகி ஞானம்தனை மக்களுக்கு தருவதுடன் நல்ல வாழ்வையும் வளமான வாழ்வையும் தந்தருளும் அவர்களுக்கு அருளும் பொருளும் அளவிலாது ஆசியும் முருகப்பெருமானின் தயவும் கிட்டி அருள்மிக்க ஞானயுகமாக ஆறுமுக அரங்கனின் தயவால் மாற்றம் அடையும்.

அரங்கமகா தேசிகனார் எனும் கருணாமூர்த்தியின் உண்மையான சேவைகள் எல்லாம் தானதருமமாக விரைந்து பெருகி வருகின்றபடியினால் அரங்கரின் தருமவழி உலகமெங்கும் அன்னதான கிளைகளை இனிதே அமைத்து தருமம் தேங்காமல் வளர்ந்து பெருகி வருகிறது.

உலகமெங்கும் தருமம் பரவி வரவர, ஆறுமுக அரங்கமகான் விரும்புகின்றவாறு உலகினரிடத்து பரிபக்குவமும் பரோபகார சிந்தையும் பெருகி மக்களெல்லாம் தருமசிந்தை உடையோராய் ஜீவதயவு உடையோராய் ஆகி தவசிகள் போல நிலை உயர்ந்து உலகமாற்றம் தனை உண்டாக்கும் உயர்ஞானிகளாக ஆறுமுக அரங்கன் தயவால் முருகப்பெருமானின் தயவினால் நிலை உயர்ந்து ஞானநிலை அடைந்து சிறப்படைவார்கள் எனக் கூறுகிறார் மகான் அத்திரிமகரிஷி.

–சுபம்–